www.nammakalvi.com



உரைநடை உலகம்

இயல் மூன்று

# ஏறு தழுவுதல்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருந்தாத இணை எது?**

அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர்– கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

**விடை: ஆ) திருவாரூர் – கரிக்கையூர்**

**2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

**விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்**

**3. சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை

ஆ) தமிழ் அகராதி

இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

i) ஆ, அ, இ ii) ஆ, இ, அ iii) இ, ஆ, அ iv) இ, அ, ஆ

**விடை: i) ஆ, அ, இ**

### குறுவினா

**1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

ஜ(ச)ல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, ஏறுதழுவுதல், காளை விரட்டு, மாடுபிடித்தல், எருதுகட்டி, ஏறுவிடுதல் எனப் பல்வேறு வடிவங்களில் ஏறுதழுவுதல் அழைக்கப்படுகிறது.

**2. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.**

முல்லைக் கலியில், ஏறுதழுவுதல் என்றும் சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் ‘ஏறுகோள்’ என்றும் கண்ணுடையம்மன் பள்ளு என்ற சிற்றிலக்கியத்தில் ‘எருதுகட்டி’ என ஏறுதழுவுதல் பற்றி குறிக்கப் பெற்றுள்ளன.

**3. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

ஏறுதழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

**இடங்கள்:**

1. சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட "எருது பொருதார் கல்'' ஒன்று உள்ளது.
2. கோவுரிச் சங்கன் கருவந்துறை எனும் ஊரில் எருதோடு போராடி இறந்து பட்டான். சங்கன் மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் ஒன்றுள்ளது.
3. நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகிலுள்ள கரிக்கையூரில் மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவது போன்ற ஓவியம் காணப்படுகிறது.
4. திமிலுடன் கூடிய காளை ஒன்றை அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது.

## சிறுவினா

**1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.**

ஏறுதழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருதநிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

**2. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?**

தமிழக உழவர்கள், தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவின்போது, மாடுகளைக் குளிப்பாட்டி, பல வண்ணங்களில் பொட்டிட்டு மூக்கணாங்கயிறு, கழுத்துக்கயிறு, பிடிகயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர் பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டிவிடுவர். இதன் தொடர்ச்சியாக வேளாண குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதலாகும்.

## நெடுவினா

**1. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.**

**இளைஞர்களின் வீரம்:**

வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழவோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். ஏறுதழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

www.nammakalvi.com



**வன்மமும், போர்வெறியும்:**

மேலை நாடுகளுள் ஒன்றான ஸ்பெயினில், காளைச் சண்டை தேசிய விளையாட்டாகக் கொண்டாடப்படுகிறது. அதில் காளையை அடக்கிக் கொல்பவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவர். காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் காளை கொல்லப்படுவதும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையுமே வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

**அன்பும் வீரமும்:**

தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக்கூடாது. நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் ............ ல் உள்ளது.**

அ) கோத்தகிரி ஆ) கரிகையூர் இ) ஆதிச்சநல்லூர் ஈ) கல்லூத்து மேட்டுப்பட்டி

**விடை: ஈ) கல்லூத்து மேட்டுப்பட்டி**

**2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.**

அ) ஏறுதழுவுதல் - தமிழகம்
ஆ) காளைச்சண்டை - ஸ்பெயின்
இ) கம்பளா - கர்நாடகம்
ஈ) எருதுகட்டி - மலையாளம்

**விடை: ஈ) எருதுகட்டி - மலையாளம்**

**3. பொருந்தாததைத் தேர்ந்தெடு.**

அ) ஜல்லிக்கட்டு ஆ) மாடுவிடுதல் இ) மஞ்சுவிரட்டு ஈ) சேவல் சண்டை

**விடை: ஈ) சேவல் சண்டை**

**4. எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்**

இவ் அடிகள் இடம் பெற்ற நூல் எது? எதனைப் பற்றிக் கூறுகிறது?

**விடை: கலித்தொகை, ஏறுதழுவுதல்**

www.nammakalvi.com



## நிரப்புக

5. ஏறுதழுவுதல் பற்றிக் கூறும் இலக்கண நூல் ............ **விடை: புறப்பொருள் வெண்பாமாலை**

6. காளைப்போர் குறித்த சான்றுகள் கிடைத்துள்ள பிறநாடுகள் ............ **விடை: எகிப்து, கிரீட் தீவு**

7. காளைச் சண்டையை தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு ............ **விடை: ஸ்பெயின்**

## குறுவினா

**1. 'மாட்டுப் பொங்கல்' - குறிப்பு எழுதுக.**

மாடுகளைக் குளிப்பாட்டிப் பல வண்ணங்களில் பொட்டிட்டு, மூக்கணாங் கயிறு, கழுத்துக் கயிறு, பிடி கயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ, துண்டோ கழுத்தில் கட்டுவர். மாடுகளுக்குப் பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டுவர்.

**2. ஏறு தழுவுதலில் நம் கடமை யாது?**

பண்டைய வீரவுணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும், இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும். நம் முன்னோரின் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 67

**1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**உரையாடுபவர்கள் : ஆசிரியர், கபிலன், அமிழ்தன்.**

**ஆசிரியர்** : கலித்தொகை, முல்லைக்கலியில் காளைகள் முட்டியும், மோதியும், எதிர்த்தும், மண்டியிட்டும் வீரர்களைப்போல் பாய்ந்தது என்பதை அறிந்தீர்கள் அல்லவா! அதைப் போல நீங்கள் கண்டனவற்றைக் கூறுங்கள்.

**கபிலன்** : நண்பா அமிழ்தா! எங்கள் ஊர் சல்லிக்கட்டில் எப்படி வாடிவாசலைத் திறந்தவுடன் நம் ஆசிரியர் கூறியதுபோல காளைகள் வேகமாக வந்தனவல்லவா!

**அமிழ்தன்** : ஆம் கபிலன்! எனக்கு பாதுகாப்பு தடுப்புக்குப் பின் இருந்து பார்க்கவே பயமாக இருந்தது. கலித்தொகை கூறிய காளைகள் போலவே திமில் பெருத்து இருந்தது அல்லவா!

**கபிலன்** : ஆம் அமிழ்தா! எப்படி மண்மேடுகளை எல்லாம் தாவி வந்தது பார்த்தாயா!

**அமிழ்தன்** : ஆம் கபிலன்! சரி! அதன் கொம்பில் சுற்றிய பணம் யாருக்கு!

**கபிலன்** : இது தெரியாதா அமிழ்தா! அக்காளையை அரவணைத்து அடக்குபவருக்குத்தான்.

**அமிழ்தன்** : ஆம் கபிலா! நம் இலக்கியத்தில் கூறியதைப் போலவே ஆயுதமே இல்லாமல் அடக்கி, வென்றுவிட்டனரே! மிக்க மகிழ்ச்சியாய் இருக்கிறதடா!

www.nammakalvi.com



**2. உங்கள் ஊரில் பொங்கல் விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக் கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.**

**பொங்கல் விழா 2018**

**ஊராட்சி ஒன்றியம் வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்.**

| | | |
|---|---|---|
| இடம் : விளையாட்டரங்கம்<br>நாள் : 15.1.2018<br>நேரம் : காலை 8 மணி | தலைமை :<br>முன்னிலை : | ஊராட்சி மன்றத் தலைவர்<br>தலைமையாசிரியர்,<br>ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி. வள்ளியூர். |

**நிகழ்ச்சிநிரல்**

**1. சாக்கு ஓட்டம்:**

சிறுவர்களே! சிறுமியர்களே! முதலாவது நிகழ்ச்சியாக பன்னிரெண்டு வயதுக்குட் பட்டவர்களுக்கு இப்போட்டி. சாக்குக்குள்ள காலை நுழைத்துக் கொண்டு ஓடி வர வேண்டும். சாக்கு இல்லேன்னு சாக்குச் சொல்லாதீங்க. வாங்க... போட்டிக்கு வாங்க!

**2. தவளை ஓட்டம்:**

தண்ணியில்லா நேரத்தில் தவளை எங்கிருந்து வரும்? அப்படினு நினைக்காதீங்க! குட்டிக் குட்டித் தவளைகள் எட்டி எட்டிப் பாக்குது... தவளைகளே தவ்வித் தவ்விதான் போகனும் எந்திருச்சி ஓடக் கூடாது! வரிசையில் உக்காருங்க... போட்டி தொடங்குது.

**3. புட்டியில் தண்ணீர் நிரப்புதல்:**

மகளிர் வாங்க... உங்க சிக்கனத்தை நான் கண்டுபிடித்துச் சொல்றேன். கையில் தண்ணீர் எடுத்து புட்டியில் நிரப்ப வேண்டும். தண்ணீர் சிக்கனம் இக்கனம் தேவை.

**4. இசை நாற்காலி:**

சிறுவர்களுக்கு என்று ஒருபோட்டி சிறுமியர்களுக்கென ஒரு போட்டி பாட்டு கேட்டுகிட்டே கவனத்தோடு நாற்காலியில் இடம் பிடிக்கவும். கவனமாக நீங்க இருக்கிறீங்களா... ஒரு தேர்வு.

**5. உருளைக்கிழங்கு பொறுக்குதல்:**

இவ்விளையாட்டில் இரண்டிற்கு மேற்பட்ட எத்தனை நபர்களும் விளையாடலாம்.

சில மீட்டர் இடைவெளியில் இரு பக்கமும் வரிசையாக எத்தனை நபர் விளையாடுகிறார்களோ அத்தனை கட்டங்கள் போட வேண்டும். ஒரு பக்கத்தில் உள்ள கட்டத்திற்குள் தேவைக்கேற்ப உருளைக்கிழங்குகள் வைத்திருக்க வேண்டும். எதிர்பக்கத்தில் உள்ள கட்டம் காலியாக இருக்கவேண்டும். மணி ஒலித்தவுடன் உருளைக்கிழங்கு இருக்கும் கட்டத்திற்கு முன் நிற்பவர்கள் அதிலிருந்து ஒன்று எடுத்து தனக்கு நேர்எதிரே இருக்கும் கட்டத்திற்குள் கொண்டுபோய் வைக்க வேண்டும். இப்படியாக ஒவ்வொன்றாக ஓடி வந்து எடுத்து முதலில் நிரப்புகிறவர்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவர்.

www.nammakalvi.com



**6. ஊசியில் நூல் கோத்தல்:**

அறுபது வயதுக்கு மேற்பட்ட தாத்தா பாட்டிக்குத்தான் இந்தப்போட்டி. எடுக்கவோ? கோக்கவோ? எடுத்துக் கோக்க வேண்டும். சிறுவராக இருக்கும். போதே காய்கறிகள், கீரை வகைகள் சாப்பிட்டால் தான் இப்ப கோக்க முடியும்.

**7. கோலம் போடுதல்:**

பெண்களுக்கான போட்டி. வாசலில் போடும் வண்ணக் கோலங்கள்! உங்கள் மன எழுச்சிகளை அந்த கோலத்தில் காணலாம். இளங்காலைப் பொழுதில் ஓசோனிலிருந்து வரும் தூய காற்று உங்களுக்கு இயற்கை தந்த இன்பப் பரிசு.

**8. கயிறு இழுத்தல்:**

நம்ம ஊர் இளைஞர்களை இரண்டு அணியாகப் பிரித்து அங்கே கிடக்கிற வடக்கயிறு ஆளுக்கொரு பக்கம் பிடித்து இழுக்கனும். இழுக்கும் போது கயிறு அறுந்தா நாங்க பொறுப்பில்லை!

**9. மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல்:**

வேகம்... சைக்கிள், வண்டி, வாகனங்கள் எதிலுமே வேகம்...வேகம்... ஆனா இங்கே மெதுவாக ஓட்டவேண்டும். காலை கீழே ஊன்றினால் போட்டியிலிருந்து நீக்கப்படுவீர்கள், வேகமாகப் போனாலும் நடுவர்கள் போட்டியிலிருந்து நீக்கிடுவார்கள். கவனமாகப் போய் பரிசைப் பெறுங்கள்.

**10. பானை உடைத்தல்:**

மேலே பானை தொங்கும். நீளகம்பு தருவோம். ஆனா துண்டுல உங்க கண்ணை இறுக்கமாகக் கட்டிவிடுவோம். பார்வையாளர்கள் கவனமாக இருக்கவேண்டும். இளைஞர்கள் வேகத்தில் வந்து உங்கள் தலையைப் பதம் பார்த்து விடக் கூடாது!

எல்லோரும் பார்த்து மகிழ்ச்சியாக இருங்கள்!


※※⁂⁂⁂※※


இயல் மூன்று

*கவிதைப் பேழை*

# மணிமேகலை

## தெரிந்து கொள்வோம்




### சொல்லும் – பொருளும் :

| | | | |
|---|---|---|---|
| சமயக்கணக்கர் | - சமயத் தத்துவவாதிகள் | பாடைமாக்கள் | - பலமொழி பேசும் மக்கள் |
| குழீஇ | - ஒன்றுகூடி, குழுமி | தோம் | - குற்றம் |
| கோட்டி | - மன்றம் | வேதிகை | - திண்ணை |
| தூணம் | - தூண் | தாமம் | - மாலை |
| விலோதம் | - துணியாலான கொடி | செற்றம் | - சினம் |
| வசி | - மழை | கலாம் | - போர், கலகம் |
| துறை | - நீர்நிலையின் ஓரங்கள் | மதலை மாடம் | - பெரிய மாடம் |
| விழவுமலி | - விழாக்கள் மிகுந்த | | |

கதலிகைக் கொடி - சிறு, சிறு கொடி (சிறிது சிறிதாக பல கொடிகள்)
காழூன்று கொடி - கொம்புகளில் கட்டும் கொடி
துருத்தி - ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவில் உள்ள மணல்திட்டுகள்)

### இலக்கணக் குறிப்பு:

| | | | |
|---|---|---|---|
| தோரணவீதியும் | - எண்ணும்மை | தோமறு கோட்டியும் | - எண்ணும்மை |
| மாற்றுமின் | - ஏவல் வினைமுற்று | பரப்புமின் | - ஏவல் வினைமுற்று |
| உறுபொருள் | - உரிச்சொல் தொடர் | தாழ்பூந்துறை | - வினைத்தொகை |
| நன்பொருள் | - பண்புத்தொகை | தண்மணல் | - பண்புத்தொகை |

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| நல்லுரை | - | பண்புத்தொகை |
| பாங்கறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| காய்க்குலைக் கமுகு | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |
| பூக்கொடி வல்லி | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |
| முத்துத்தாமம | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**1. பரப்புமின் - பரப்பு + மின்**

| | | |
|---|---|---|
| பரப்பு | - | பகுதி, |
| மின் | - | முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி. |

**2. அறைந்தனன் - அறை + த்(ந்) + த் + அன் + அன்**

| | | |
|---|---|---|
| அறை | - | பகுதி, |
| த்(ந்) | - | ஆனது விகாரம், |
| த் | - | இறந்தகால இடைநிலை, |
| அன் | - | சாரியை, |
| அன் | - | ஆண்பால் வினைமுற்று விகுதி. |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

**விடை: ஈ) தொகைச்சொற்கள்**

### குறுவினா

**1. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

இடம் : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றிருக்கிறது இத்தொடர்.

பொருள் : விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

விளக்கம் : மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது காதைகளுள் முதல் காதையாக விளங்குவது விழாவறை காதை ஆகும். புகார் நகரில் இருபத்தெட்டு நாள் நடைபெறக்கூடிய இந்திரவிழா தொடங்க உள்ளது. இந்த அறிவிப்பை யானை மீது அமர்ந்து முரசறைவோன் அறிவித்தான். விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழையமணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கிறான்.

**2. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

பட்டிமண்டபம் என்பது இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

www.nammakalvi.com



"மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்''
பகைப் புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் எனச் சிலப்பதிகாரத்திலும்,
"பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்'' என மணிமேகலையிலும்
"பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை;
எட்டினோடு இரண்டும் அறியனையே'' என்று திருவாசகத்திலும்
"பன்னரும் கலை தெரி பட்டிமண்டபம்'' எனக் கம்பராமாயணத்திலும்

இச்சொல் பயின்றுவருதலை அறியலாம்.

## சிறுவினா

**1. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

| | உள்ளூர் விழா | இந்திரவிழா |
|---|---|---|
| 1. | ஊர் நாட்டாண்மை,மணியம் ஊர்ப் பெரியோர், கோயில் குருக்கள், முதியோர், இளைஞர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி கோயில் முன்பாக அமர்ந்தனர். | புகார் நகரில் இந்திரவிழா நடைபெறுவது குறித்து முரசறைவோன் நான்கு வகைப் படைகளும் சூழ அகன்ற முரசறைந்து "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க'' அறிவித்தான். அயல்நாட்டினரும் அரசர், அமைச்சர் ஐம்பெருங்குழு, எண்பேராயம் அவையில் திரண்டிருந்தனர். |
| 2. | ஊர்த் திருவிழாவிற்கு நாள் குறித்தவுடன் ஊர் சாட்டல், ஊர் நுழைவாயிலிலே வேப்பிலை, மாவிலைத்தோரணங்கள்கட்டுதல்,வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூசுதல் கோயில்களுக்கு வண்ணம் பூசுதல் ஆகிய முன்னேற்பாடான ஆயத்தப் பணிகள் செய்தனர். | தோரணம் கட்டிய தெருக்கள், மன்றங்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மங்கலப் பொருள்கள் அழகுபடுத்தி வைக்கப்பட்டன. பாக்கு மரம், வாழைமரம் வஞ்சிக் கொடி, கரும்புகளையும் நட்டு வைத்தனர். தங்கத் தூண்களில் முத்துமாலைகள் தொங்கவிட்டனர். |
| 3. | ஊரவர் வேறுபாடின்றி ஒற்றுமையாக பட்டிமன்ற நிகழ்ச்சி வழியாக சமூகப் பிரச்சனைகளை விவாதித்து தீர்வு கண்டனர். தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், பொய்க்கால் நிகழ்ச்சிகள் நடத்தினர். | <u>பட்டிமண்டபம் ஏறுமின்</u><br>ஊர் மன்றங்களில் அவரவர் சமயத்திற்கு உரிய பொருளை வாதிட்டுத் தீர்வு கண்டனர். |
| 4. | உறவினர்களையும் விருந்தினர்களையும் அழைத்து திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளச் செய்தனர். | கருத்துமாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது தேவரும் மக்களும் ஒன்றுபட்டு இருபத்தெட்டு நாள்களிலும் உலவி வந்தனர். |

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம் ............**

அ) சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) வளையாபதி

**விடை: இ) மணிமேகலை**

**2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.**

அ) வசி - மழை ஆ) கோட்டி - மன்றம்
இ) தாமம் - மாலை ஈ) செற்றம் - இன்பம்

**விடை: ஈ) செற்றம் - இன்பம்**

**3. பொருந்தாதனைத் தேர்ந்தெடு.**

அ) தூதர் ஆ) சாரணர் இ) படைத்தலைவர் ஈ) புலவர்

**விடை : ஈ) புலவர்**

**4. பின்வரும் கருத்துகளில் மணிமேகலை நூல் கூறும் கருத்து ............**

அ) அன்பே சிவம் ஆ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
இ) பசியும் நோயும் பகையும் நீங்குக ஈ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

**விடை: இ) பசியும் நோயும் பகையும் நீங்குக**

## நிரப்புக

5. இந்திரவிழாவைக் குறிப்பிடும் காதை ............ **விடை: விழாவறைகாதை**

6. மணிமேகலையின் காதைகள் ............ **விடை: 30**

7. கூலம் என்பதன் பொருள் ............ **விடை: தானியம்**

8. இளங்கோவடிகள் சாத்தனாரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

**விடை: தண்டமிழ் ஆசான் சாத்தன் நன்னூற் புலவன்**

## சிறுவினா

**1. 'மணிமேகலை' - நூல் குறிப்புத் தருக.**

கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால் மணிமேகலைத் துறவு என்ற பெயரும் மணிமேகலை நூலுக்கு உண்டு. பௌத்த சமயச் சார்புடையது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். முப்பது காதைகளைக் கொண்ட நூல்.

**2. 'சீத்தலைச் சாத்தனார்' - குறிப்புத் தருக.**


சீத்தலை சாத்தனார்

- மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் திருச்சியைச் சேர்ந்த சீத்தலை என்ற ஊரில் பிறந்தவர் என்பர்.
- கூலம் எனப்படும் தானிய வணிகம் செய்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற் புலவன் என்ற பெயர்களும் உண்டு.
- சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும், சாத்தனாரும் சமகாலத்தவர்.

www.nammakalvi.com



**3. ஐம்பெருங்குழு, எண்பேராயத்தை விவரி.**

**ஐம்பெருங்குழு**

- அமைச்சர்
- சடங்கு செய்விப்போர்
- படைத்தலைவர்
- தூதர்
- சாரணர் (ஒற்றர்)

**எண்பேராயம்**

- கரணத்தியலவர்
- கரும விதிகள்
- கனகச்சுற்றம்
- கடைக்காப்பாளர்
- நகரமாந்தர்
- படைத்தலைவர்
- யானை வீரர்
- இவுளி மறவர்

## நெடுவினா

**1. மணிமேகலை நூலின் விழாவறை காதையில் சொல்லப்படும் கருத்துகளைக் கூறுக.**

**இந்திர விழாவைக் காண வந்தோர்:**

- புகார் நகரில் உலகியல், தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை விளக்குபவராகிய சமயவாதிகள் கூடி உள்ளனர்.
- காலக்கணிதர், கடவுனர், பல மொழி பேசும் அயர்நாட்டினர், ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயத்தைச் சேர்ந்தவர்களும் அரசவையில் ஒன்று திரண்டு உள்ளனர்.

**விழா முன்னேற்பாடுகள்:**

- தோரணம் கட்டிய தெருக்களிலும், மன்றங்களிலும் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு போன்ற மங்கலப் பொருள்களை அழகுபடுத்தி வையுங்கள்.
- குலை முற்றிய பாக்கு மரத்தையும், வாழை மரத்தையும், வஞ்சிக் கொடியையும், பூங்கொடிகளையும், கரும்பையும் நட்டு வையுங்கள். வீடுகளின் முன் தெருத் திண்ணையின் தங்கத் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்க விடுங்கள்.
- தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள். துகில் கொடிகளை மாடங்களின் வாயில்களில் சேர்த்துக் கட்டுங்கள்.

**பட்டிமண்டபம் ஏறுக:**

பந்தல்களிலும், ஊர்மன்றங்களிலும் நல்லவை பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள். சமயத்திற்கு உரிய உட்பொருள் அறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

**சினமும் பூசலும் கைவிடுக:**

- பகைவரிடம் கோபமும், பூசலும் கொள்ளாது விலகி நில்லுங்கள்.
- மணல் குன்று, பூஞ்சோலை, ஆற்றிடைக் குறை, நிழல் தரும் தண்ணீர்த் துறைகளில் நடைபெறும் இருபத்தெட்டு நாள் விழா நிகழ்வுகளில் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவி வருவர் என்பதனை நன்கு அறியுங்கள்.

**வாழ்த்து:**

காலாட் படையினரும், தேர்ப் படையினரும், குதிரைப் படையினரும், யானைப் படையினரும் சூழ்ந்து வர அகன்ற முரசினை முரசறைவோன் அறைந்தான்.

"பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக" என்று வாழ்த்தி முரசறைந்தான்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 71

**1. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.**

**ஸ்ரீ அருள்மிகு கோட்டை மாரியம்மன் மாசிப் பெருவிழா**

**திண்டுக்கல்**

### திருவிழா அழைப்பிதழ்

**அன்பார்ந்த கோட்டை மாரியம்மன் பக்தகோடிகளே!**

இந்தாண்டு ஸ்ரீஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் திண்டுக்கல் அருள்மிகு ஸ்ரீ கோட்டை மாரியம்மன் மாசிப் பெருவிழா நடைபெறும். அப்பொழுது கீழ்க்குறித்த நாள்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். பக்தகோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,
நிர்வாகக் குழுவினர்,
ஸ்ரீ அ/மி கோட்டை மாரியம்மன்
மாசிப் பெருவிழாக் குழுவினர்
திண்டுக்கல்.

**நிகழ்ச்சி நிரல்**

| நாள் | நிகழ்ச்சி | சிறப்புச் செய்பவர்கள் |
|---|---|---|
| 12.3.18 வியாழன் | விழா கொடியேற்றல் | |
| 13.3.18 வெள்ளி | பூத்தமலர் பூச்சொரிதல் விழா | வணிகர்கள் சங்கம் |
| 15.3.18 ஞாயிறு | சாமி சாட்டுதல் | |
| புதன் - வெள்ளி | கொடிமரத்துக்கு மஞ்சள் நீர் ஊற்றுதல் | |
| வியாழன் | அங்குவிலாஸ் வணிகக் குழுமத்தின் மண்டகப்படி | அங்குவிலாஸ் புகையிலைக் கம்பெனி |
| வெள்ளி | பூக்குழி இறங்குதல் | பக்தர்கள் |
| சனி | தசாவதாரம் | அருள் நிகழ்ச்சிகள் |
| ஞாயிறு | நாடகம்(தெருக்கூத்து) | மருதப்பா குழுவினர் |

www.nammakalvi.com



**2. குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.**

**பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் -விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.**

அந்திவானம் செம்மை படர்ந்து செக்கச் செவேல் எனத் தோன்றியது. பச்சை மரங்களடர்ந்த சோலை, சோலைகளில் பூச்செடிகள், செடிகள் தோறும் மலர்கள், அம்மலர்கள் சிரிப்பை உதிர்க்கும். எங்கும் மணம் பரப்பும் மகரந்தங்கள்! வண்டினங்கள் வந்து அமரும்.

பச்சைப் போர்வை போர்த்தியது போல் பசும்புல் தரை, புல் நுனி முழுவதும் வரகரசி ஒட்டிக் கொண்டது போல் சிறுசிறு விதைகள், தனிமையில் அமர்ந்து கூவும் குயில், சோகத்தைக் கீதமாக இசைக்கும் மாங்குயில்கள்!

தெற்குப் பகுதியில் சில்லென்று வீசும் தென்றல் பொதிகைச் சந்தனத் தாது பொங்கும் வாசனை! பசும்புல் தரையில் எங்கும் சிரித்திடும் பூக்கள்! அழகிய குழந்தைகள் வண்ண உடையில்! இத்தகைய இயற்கைக் காட்சிகள்! "கைபுனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பு இயற்கை" என்னே அழகு! வண்ணத் தியல்பு!

※※⁂⁂⁂※※

*விரிவானம்*

# இயல் மூன்று — அகழாய்வுகள்

*பட்டிமன்றம்*

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று.**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

**விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.**

### குறுவினா

**1. தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?**

- தொல்லியல் அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமைபெற உதவுகிறது.
- அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி நம் வரலாற்றையும் உணர்த்துகின்றன.

www.nammakalvi.com



## சிறுவினா

1. **வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**
   - அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என் செய்வது? செல்லிடப்பேசிக்குள்ளே உலகம் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகள் வந்தென்ன செய்ய முடியும்? மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள் இறந்தோரைச் சுமந்த மண்தாழிகள் கண்டறிந்து என்ன சாதிக்கமுடியும்? இவ்வாறு இருக்க, அகழாய்வு என்ன செய்ய இருக்கிறது?
   - அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.
   - ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டன.
   - நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்நதவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

## நெடுவினா

1. **பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**

மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள தமிழகத்தின் தொன்மையான பகுதிகளைக் கொண்டும் மக்கள் பயன்படுத்திய பழமையான கருவிகளைக் கொண்டும் இசைக் கருவிகளைக் கொண்டும் அறிய முடிகிறது. அவற்றைப் பேணிக் காக்க வேண்டும். இது நம் கடமையாகும்.

**பண்பாட்டுக் கூறு - ஏறுதழுவுதல்:**

வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகி உள்ளது ஏறுதழுவுதல். இது தமிழர்களின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு. இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. முன்னோர் வழிநின்று இளந்தலைமுறையினர் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று; காதலும் வீரமும் பழந்தமிழரின் பண்பாட்டுத் தடயங்கள். வீரமும் அன்பும் ஏறுதழுவுதலின் விளைநிலங்களாக விளங்குகிறது என்பதை வளரும் தலைமுறையினர்க்கு எடுத்துக்காட்ட ஒரு வாய்ப்பு.

**பண்பாட்டுக்கூறு - அகழாய்வு:**

அகழாய்வு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெருங்கல்வியாக அமைகின்றது. பண்பாட்டு எச்சங்களாகத் திகழும் இவ்வகையான ஆய்வுகளைக் கண்டு பயனடையலாம்.

www.nammakalvi.com



**பண்பாட்டுக்கூறு - திருவிழாக்கள்:**

கி.பி. 2 ஆம் நூற்றாண்டோடு தொடர்புடைய புகார்நகரில் கொண்டாடப்பெற்ற இந்திரவிழா சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விவரிக்கப்படுகிறது. கோயில் விழாக்களில் பண்பாட்டுக் கூறுகளாக உள்ள ஒயிலாட்டம், மயிலாட்டம், நாதசுரம், பரதம், பொய்க்கால் குதிரை ஆட்டம் எனப்பல கலைகள் நடந்தேறுகின்றன. விழா நிகழ்ச்சியில் பட்டிமன்றம், தெருக்கூத்து நாடகங்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய பண்பாட்டுக் கூறுகளையும், கலைநிகழ்வுகளையும் பேணிப் பாதுகாத்து இளந்தலைமுறையினருக்கும் இனி வரும் தலைமுறையினருக்கும் காட்டுவது நம் கடமையாகும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக.

1. அறிவின் வெளிப்பாடாய்த் திகழ்வது ........... **விடை: ஆய்வு**
2. பல்லாவரத்தில் ஆய்வு நடந்த ஆண்டு ........... **விடை: 1863**

### நெடுவினா

**1. 'அகழாய்வு' குறித்து பாடப்பகுதி கருத்துகளைக் கூறுக.**

**முன்னுரை:**

அகழாய்வு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெருங்கல்வியாக அமைகின்றது. பண்பாட்டு எச்சங்களாகத் திகழும் இவ்வகையான ஆய்வுகளைக் கண்டு பயனடையலாம்.

**கீழடி அகழாய்வு:**

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு-கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர்முனைகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள், இறப்புத் தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும், செங்கல் கட்டுமானங்களும், இதரப் பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

www.nammakalvi.com



**பல்லாவரம் அகழாய்வு:**

150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.

**அரிக்கமேடு:**

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும், நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

**ஆதிச்சநல்லூர்:**

1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. உள்ளங்கையில் உலகம் இருக்கிறது. மடிக்கணினி மலைக்க வைக்கிறது. நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

**அகழாய்வின் பயனும் முடிவும்:**

அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே, அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடு. அகழாய்வு தரும் சான்றுகளின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது. மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்துகொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 77

**1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? - என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.**

**சொற்போர்**

| கதாபாத்திரங்கள் |
|---|
| நடுவர் : கபிலன் – தமிழாசிரியர், <br> குடும்பமே : அமுதா (மாணவி), சமூகமே : வாணன் (மாணவன்) |

**நடுவர் :** அவையோருக்கு வணக்கம்!

இன்று நம் இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இன்றைய சூழலில் நம் இளைய சமுதாயத்துக்கு பல வாய்ப்புகள், வசதிகள் உலகைப்

www.nammakalvi.com



பற்றி அறிய பல வாயில்கள் உள்ளன, எனினும் பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது எது என ஆராயும் போது ஒரு சொற்போர் நடத்த வேண்டும். மாணவர்களின் சிந்தனைகளை அறிய வேண்டும் என்ற அவா எழுந்தது! அதனால் உருவானதே இத்தலைப்பு.

இப்போது குடும்பமே என சொற்போர் நிகழ்த்த வருகிறார் அமுதா.

**அமுதா :** அனைவருக்கும் இனிய வணக்கம்...

ஐயா! "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார்கள் "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பார்கள். பெற்றோர்களே முதல் ஆசான் இவற்றையெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தக் கூற்றுகள் எல்லாம் அதனை உணர்த்துகிறது. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து வரும் குடும்பச் சூழ்நிலைதான் பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது அல்லவா!

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கவிஞரின் அடிகளைச் சான்றாக்கி நற்பண்பாட்டினை வளர்ப்பது குடும்பமே.... குடும்பமே... என்று கூறி என் சொற்போரை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்!

**நடுவர் :** ஆகா! அருமையான கருத்துகள் வாங்க வாணன்ஸ உங்கள் கருத்தை வலியுறுத்துங்கள் பார்க்கலாம்.

**வாணன் :** சமூகமே

ஐயா! அமுதா எந்த நூற்றாண்டில் இருக்கிறாள் என்றே தெரியவில்லை! நீங்களே சொல்லுங்கள்! ஒரு குழந்தை 3வயது வரைதான் இப்போதெல்லாம் குடும்ப பராமரிப்பில் இருக்குது! மூணு வயதிலே சமூகத்துக்கு வந்துடுது ஐயா...

தன் ஆசிரியரைப் பார்க்கிறது. தன் சக மாணவ, மாணவியரை பார்க்கிறார்கள். வண்டி ஓட்டும் ஓட்டுநர் முதல் ஆயா வரை அந்த குழந்தைக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்.

வளர்கிறான்... சமூகத்தின் பல செய்தி சாளரங்கள் திறக்கின்றன. தன்னையும் அறியாமல் அவற்றை ஆராய்கிறான்; நன்மை தீமை அறிகிறான்; அவன் மன வலிமையைப் பொறுத்து பண்பாட்டைக் காப்பவனாகவோ அல்லது மீறுபவனாகவோ மாறுகிறான். எனவே சமூகமே பெரும்பங்கு வகிக்கிறது. நன்றி வணக்கம்!

**நடுவர் :** இருவருடைய உரையைக் கேட்கும் போது, பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது குடும்பமாக இருந்தாலும் அதனை வளர்த்தெடுக்கும் பங்கு சமூகத்தையே சார்ந்தது.... நன்றி வணக்கம்!

**2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.**

**ஐயா, வணக்கம்!**

- தமிழகத்தில் தொன்மையான பகுதிகள் என்று எப்படி வரையறைப்படுத்துவது?
- கீழடி ஆய்வு எந்த வரலாற்றை அல்லது பின்புலத்தை எடுத்துச் சொல்வதாக இருக்கிறது என்பது பற்றி விளக்கிச் சொல்லுங்களேன்.
- ஐயா! இந்த பிராமி எழுத்துகள் என்பது எந்த மொழிக்குரியது?

www.nammakalvi.com



- ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் மட்டும் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன என்று ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றன. ஏன் அங்குமட்டும் இது போன்ற தடயங்கள் அதிகமாக உள்ளன என்பதற்குக் காரணங்கள் ஏதேனும் உண்டா?
- 'அறிவியல் மக்களுக்காகவே' என்ற கொள்கையை சற்று விளக்கிச் சொல்லுங்களேன்.
- மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் இறப்புத் தடயங்கள் ஏதேனும் கிடைத்துள்ளதா?
- அகழாய்வு செய்யக் கூடிய இடங்களில் பெரும்பாலும் இறப்புப் பற்றிய தடயங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன என்று சொல்கிறார்கள் இதற்கான காரணத்தை விளக்கிச் சொல்ல முடியுமா?
- கடலுக்குள் ஆய்வுகள் இதுவரை செய்யப்பட்டிருக்கின்றனவா? பூம்புகார் நகர கடல் பகுதிகளில் செய்யப்பட்ட ஆய்வு போல் இன்றைய காலக்கட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டனவா? அப்படியானால் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது என்னென்ன தடயங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

இதுவரையிலும் தாங்கள் கூறிய அகழாய்வு பற்றிய செய்திகள் பயனுறு வகையில் அமைந்திருந்தன.

**மிக்க நன்றி!**

**3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.**

**எங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடம் : வளவூர்**

**குறிப்புகள்:**

எங்கள் ஊருக்கு அருகில் 150 ஆண்டுகளுக்கு முன் கடல் கோளால் கொள்ளப்பட்ட வளவூர் என்ற ஊரை அகழாய்வு செய்தனர். நான் அங்கு சென்று பார்த்த போது மிகவும் வியந்து போனேன்.

அக்கால மன்னன் கட்டிய அரண்மனைப் பகுதி தெரிந்தது. மக்கள் வழிபட்ட தெய்வத்திருமேனி வியப்பிற்குரியதாய் அரிதான உலோகத்தால் செய்யப்பட்டிருந்தது. அக்கால போர்வீரர்கள் பயன்படுத்திய ஆயுதம் சிதைந்துபோன நிலையில் கிடைத்தது மக்களின் உடை, வாழ்விடம், பயன்படுத்திய அணிமணிகள் ஆடம்பரமாய் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருந்தன. பிறநாடுகளுடன் கடல் வாணிகம் மேற்கொண்டதற்கான சான்றுகளும் இருந்தன. நம் முன்னோர்களின் கடந்த காலத்தை எண்ணி வியந்தேன்.

www.nammakalvi.com



*கற்கண்டு*

# இயல் மூன்று — வல்லினம் மிகும் இடங்கள்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 80

**1. வல்லினம் மிகலமா?**

அ) பெட்டி**ச்** செய்தி
ஆ) விழா**க்** குழு
இ) கிளி**ப்** பேச்சு
ஈ) தமிழ்**த்** தேன்
உ) தை**ப்** பூசம்
ஊ) கூட**க்** கொடு
எ) கத்தியை விட**க்** கூர்மை
ஏ) கார்**ப்** பருவம்

**2. தொடர் தரும் பொருளைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| அ) சின்னக்கொடி | - | சின்னம் வரையப்பட்ட கொடி |
| சின்ன கொடி | - | சிறிய கொடி |
| ஆ) தோப்புக்கள் | - | தோப்பிலிருந்து இறக்கிவரப்பட்ட கள் |
| தோப்புகள் | - | தென்னந்தோப்புகள் பலவுண்டு |
| இ) கடைப்பிடி | - | கொள்கையைக் கடைப்பிடிப்பது |
| கடைபிடி | - | வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார் |
| ஈ) நடுக்கல் | - | அடையாளமாக நடுவது; நடுக்கல் ஊன்றினோம். |
| நடுகல் | - | நினைவுச் சின்னம் |
| உ) கைம்மாறு | - | செய்த உதவி |
| கைமாறு | - | கையில் உள்ள மாறு(விளக்குமாறு) |
| ஊ) பொய்ச்சொல் | - | நீ சொன்னது பொய்ச்சொல் |
| பொய் சொல் | - | பொய் சொல்வது தவறு |

**3. சிந்தனை வினா:**

நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதி வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிக வேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.

**அதற்க்கு - தவறு**

அதற்கு = அது + அன் + கு

அது (சுட்டுப்பெயர்) + அன்(சாரியை) + கு(வேற்றுமை உருபு)

அதன் + கு = அதற்கு - என்பதே சரி

வல்லொற்றுக்கு அருகில் இன்னொரு வல்லினம் மிகாது.

அதற்கு என்றே எழுத வேண்டும்

எ.கா: இந்தப் பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்.

**கடைபிடித்தல் - கடைப்பிடித்தல்**

கடைபிடித்தல் - கடையைப் பிடித்தல்

கடைப்பிடித்தல் - பின்பற்றுதல்

இதில் கடைபிடி என்பது கடையைப்பிடி என்று பொருள், அதே சொல்லில் வல்லினம் மிகுந்து 'கடைப்பிடி' என வரும் போது பின்பற்றுதல் என்னும் பொருள் தரும்.

எ.கா: சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார்.

நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.

எனவே வல்லினம் இட்டு எழுதுவதில் கவனம் தேவை!

**4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்றப் பொருள்களும் உறுதிபடுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களில் பலர்ச் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்தப் பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்குக் குறைவான எண்ணிக்கையில்தான் தங்கத்தினாலானப் பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்தக் கோடரி, குத்தீட்டிகள், முதலான கருவிகளும் யானைத்தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள். கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடுப் போன்றவையும் கிடைத்துள்ளன.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 82

**படித்துச் சுவைக்க.**

ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ
தூங்காத கண்ணே உனைத் தூங்க வைப்பேன் ஆரிராரோ
மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டுத்
தேன் பார்த்து நெல்விளையும் செல்வந்தனார் புத்திரனோ!
வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும் அதிர்ஷ்டமுள்ள புத்திரனோ
முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா
தொட்டில் கட்டித் தாலாட்ட தூக்கம் வருமோடா
கதிரறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்
மதியத்து வெயிலிலே மயக்கமும்தான் வாராதோ
வயலிலே வேலை செய்வேன் வரப்பினிலே போட்டிடுவேன்
வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ?

**- நாட்டுப்புறப்பாட்டு, தகவலாளர்: வேலம்மாள்**

www.nammakalvi.com



**பொன்மொழிகளை மொழி பெயர்க்க.**

1. **A nation's culture resides in the hearts and in the soul of its people -Mahatma Gandhi**
   நம் நாட்டினுடைய பண்பாட்டினை மக்கள் அனைவரும் தம் இதயங்களிலும், ஆத்மாவிலும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்.
2. **The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru**
   மக்களின் கலை உணர்வே அவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி
3. **The biggest problem is the lack of love and charity - Mother Teresa**
   அன்பு செலுத்துதல், தர்மம் செய்தல் இவற்றின் குறைபாடே, மிகப்பெரிய பிரச்சனையாய் உள்ளது.
4. **You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam**
   உங்கள் கனவு நனவாகும் வரை, கனவு காணுங்கள்.
5. **Winners don't do different things; they do things differently - Shiv Khera**
   வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை மாறாக ஒவ்வொரு செயலையும் வித்தியாசமாக செய்கிறார்கள்.

## வடிவம் மாற்றுக

**பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

**விடை:**

**4** தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன. **2** டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ் மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. **3** இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன. **1** உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது

www.nammakalvi.com



**மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**எ. கா : மேலும் கீழும்:**

ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் **மேலும் கீழும்** பார்த்தான்.

1. **மேடும் பள்ளமும்:**
   சேரி மக்களின் வாழ்க்கை **மேடும் பள்ளமும்** கொண்டதாக இருக்கிறது.
2. **நகமும் சதையும்:**
   மும்தாஜும் தமிழரசியும் **நகமும் சதையும்** போல இணைபிரியாத் தோழிகள்.
3. **முதலும் முடிவும்:**
   இது போன்ற தவறுகள் **முதலும் முடிவும்** ஆக இருக்கட்டும் என்று ஆசிரியர் அவர்களிருவரையும் எச்சரித்தார்.
4. **கேளிக்கையும் வேடிக்கையும்:**
   எங்கள் ஊர்த் திருவிழா **கேளிக்கையும் வேடிக்கையும்** நிறைந்ததாக இருந்தது.
5. **கண்ணும் கருத்தும்:**
   அன்பழகன் **கண்ணும் கருத்துமாகப்** படித்துத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றான்.

**தொகுப்புரை எழுதுக.**

**பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.**

**தமிழ் இலக்கிய மன்ற விழா**

**இடம்** : வித்யாபார்த்தி மேனிலைப் பள்ளி, சீலப்பாடி, திண்டுக்கல் -5.
**நாள்** : திருவள்ளுவராண்டு, ஸ்ரீவிளம்பி வருடம், வைகாசி 23.
06.06.2018 புதன்கிழமை

**தொகுப்புரை:**

திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி, வித்யாபார்த்தி மேனிலைப்பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றக் கூட்டம் பிற்பகல் 3.00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் ஜாக்குலின் மேரி தலைமை தாங்கினார். பள்ளித் தாளாளர் டாக்டர். ஆர். கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். மாவட்ட அளவில் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற 12ஆம் வகுப்பு மாணவர் இன்ப வண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியங்களில் எவ்வாறு இன்பச்சுவை அமைந்து இருக்கிறது என்பது பற்றிப் பேசினார். முன்னிலை வகித்துப் பேசிய பள்ளித் தாளாளர் கிருஷ்ணமூர்த்தி முக்கூடற்பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களில் இன்பச் சுவையோடு நகைச்சுவையும் இருக்கிறது என்பது பற்றிப் பேசினார்.

தலைமை ஆசிரியர் தலைமை உரையில் இலக்கியத்தில் பாடுபொருள் எவ்வாறெல்லாம் காலத்திற்கேற்றாற் போல் மாறி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிப் பேசினார்.

சிறப்புச் சொற்பொழிவாற்றிய திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், ஒன்பான் சுவைகளை விளக்கி நகைச்சுவை உணர்வோடு “**இலக்கியத்தில் இன்பச்சுவை**” எனும் தலைப்பில் இலக்கிய விருந்து படைத்தார்.

நிறைவாக, இலக்கியமன்றச் செயலர் 12ஆம் வகுப்பு மாணவி அன்புச் செல்வி நன்றியுரை ஆற்றினார்.

www.nammakalvi.com



**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று ‘காங்கேயம்’ கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்:**

**1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?

ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

**விடை: காங்கேயம் இனக் காளைகள்**

**2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.**

அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா

**விடை: இ) இலங்கை**

**3. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன. ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன.

இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன. ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன.

**விடை: அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன.**

**4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?**

அ) வினாத் தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்

**விடை: இ) செய்தித்தொடர்**

## மொழியோடு விளையாடு

**பொருள் எழுதித் தொடரமைக்க.**

**கரை, கறை; குளவி, குழவி; வாளை, வாழை; பரவை, பறவை; மரை, மறை;**

| | | |
|---|---|---|
| **அலை** | கடலலை | இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாவுள்ளது. |
| **அழை** | வரவழைத்தல் | என் நண்பர்களை வரவழைத்துள்ளேன் |
| **கரை** | ஆற்றின் ஓரம் | ஆற்றங்கரையில் தென்னை மரங்கள் செழித்து வளர்ந்து உள்ளன. |
| **கறை** | படிவது கறை | சட்டையில் கறை படிந்துள்ளது. |
| **குளவி** | பூச்சி வகைகளுள் ஒன்று | வாசல் நிலைப்படியில் குளவி கூடுகட்டியிருக்கிறது. |
| **குழவி** | குழந்தை | குழவி மருங்கினும் கிழவதாகும் (பிள்ளைத்தமிழ்) |
| **வாளை** | மீன்களில் ஒருவகை | நீர் நிலைகளில் வாளை மீன் துள்ளிக் குதித்தது. |
| **வாழை** | வாழை மரம் | திருமணப் பந்தலில் வாழை மரங்கள் கட்டினர். |
| **பரவை** | பரந்துள்ள கடல் | மதுரைக்குப் பக்கத்திலுள்ள சிற்றூர் பரவை. |
| **பறவை** | பறப்பவை | காலைப் பொழுதில் பறவைகள் பாடும். |
| **மரை** | மான், தாமரை | தாமரை நீர் நிலையில் மலரும். |
| **மறை** | வேதம் | வேதபாட சாலையில் நான்மறை ஓதப்பட்டன. |

**அகராதியில் காண்க.**

**இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பௌரி**

**இயவை** : வழி, மூங்கில் அரிசி, துவரை, தோரை நெல், காடு
**சந்தப்பேழை** : சந்தனப் பெட்டி
**சிட்டம்** : நூல் சிட்டம், எரிந்து கருகியது, பெருமை அறிவு, நீதி, உயர்ந்து
**தகழ்வு** : அகழ், அறிவு, உண்கலம்
**பௌரி** : பெரும் பண்வகை.

**பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.**

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

**காலங்களில்** தெருவில் **வைக்காதீர்கள்** காப்புக் கம்பிகள் **கவனக்** குறைவுடன் **ஆகியவற்றின்** மீது காலை அறுந்த **மழைக்** மின்கம்பிகள்.

**விடை:**

1. வைக்காதீர்கள்
2. **மழைக் காலங்களில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்
3. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்
4. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது கவனக் குறைவுடன் காலை** வைக்காதீர்கள்

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | | 2 இ | ந் | 3 தி | 4 ர | வி | ழா | |
| று | 5 த | வ | | ர | | | | 6 சா |
| 7 த | வ | ளை | 8 ஒ | ட் | ட | ம் | | ல |
| ழு | | | | 9 சி | | 10 வி | தி | |
| வு | ய் | 11 ஆ | | ர் | னா | த | த் | 12 சா |
| த | | | | கா | | 13 மா | 14 வ | டி |
| ல் | | ர் | 15 க | க் | | 16 | | க |
| | ய் | 17 யா | னி | 18 த | | | 19 கோ | ள் |

### இடமிருந்து வலம்

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6)
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துகள் இடம் மாறியுள்ளது (3)
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7)
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2)
13. மா + அடி - இதன் புணர்ந்த வடிவம் (3)
19. கொள் என்பதன் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் (2)

### வலமிருந்து இடம்

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2)
11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3)
12. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் (5)
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்குரிய விலங்கு (2)
18. தனி + ஆள் - சேர்த்து எழுதுக. (4)

### மேலிருந்து கீழ்

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7)
2. இவள் + ஐ - சேர்ந்தால் கிடைப்பது(3)
3. மரத்தில் காய்கள் ... ... .. ஆகக் காய்த்திருந்தன (4)
5. உரிச்சொற்களுள் ஒன்று (2)
6. .. ... ... ...... சிறந்தது(2)
8. நேர்ததைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)
15. காய் பழுத்தால்... ... .... (2)

### கீழிருந்து மேல்

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது (3)
17. யா முதல் வரும் வினாப்பெயர் (2)
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4)

www.nammakalvi.com



**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** பக்கம்: 86



1. பரதம் பாரதத்தின் பண்பாட்டுக் கலையாகும்.
2. தமிழகத்தின் இசைக்கருவிகளுள் நாதசுரமும் ஒன்று. தவில் தோற் கருவிகளுள் ஒன்று.
3. தம்புரா சுருதி தவறாமல் இருப்பதற்கு இசைக்கப்படுவது.
4. பறை, தோல் கருவிகளுள் தொன்மையானது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் இசையில் நுண்ணிய வேறுபாடு உண்டு.
5. தமிழ்நாட்டுப் பெண்களில் எண்ணங்களை வாசல் முன் வெளிப்படுத்துவது. எரியும் குத்துவிளக்கு மங்கலம் சின்னங்களில் ஒன்று.
6. தமிழர்களின் காதலும் வீரமும் இருகண்கள், காளையை அடக்கி பெண்ணைத் திருமணம் செய்தனர். இஃது ஒரு பண்பாட்டு நிகழ்வு.

## செயல்திட்டம்

**தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் குறித்த செய்திகளை, நாளிதழ்களிலோ புத்தகங்களிலோ திரட்டிச் செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.**

**தொல்லியல் பற்றிய செய்திகள்:**

தேனி மாவட்டம், போடி, சி.பி.ஏ., கல்லூரி வரலாற்றுத்துறை மற்றும் பாண்டியநாடு பண்பாட்டு மைய தொல்லியியல் துறை மூலம், இந்த ஆய்வு நடந்தது.

உதவி பேராசிரியர், மாணிக்கராஜ் கூறியதாவது:

தே.கல்லுப்பட்டி அருகே, கவசகோட்டை கிராமத்தில், பண்ணைமேடு எனப்படும், அக்ரஹாரமேடு பகுதியில் தமிழரின் தொன்மையை கண்டறியும் நோக்கில், ஆய்வு மேற்கொண்டோம். இதில், தமிழரின் தொன்மை எழுத்து வடிவமான, தமிழ், **'பிராமி'** எழுத்துக்கள் பொறித்த, கருப்பு, சிவப்பு வண்ணமுடைய பானை ஓடுகள், முதுமக்கள் தாழி, சுடுமண் பொம்மைகள், மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பானை ஓடுகளில், கி.பி. 1 மற்றும் 2ம் நூற்றாண்டை சேர்ந்த, தமிழ் பிராமி எழுத்து வடிவம் இடம் பெற்றுள்ளது. தொடர் எழுத்துகள் கிடைக்காததால், முழுவதும் படித்து அறிய முடியவில்லை. இங்கு காணப்படும் செங்கல்கள், கீழடி அகழ்வாய்வு கட்டுமானத்தில் இருந்த

www.nammakalvi.com



செங்கல்களின் அமைப்பை போன்றே காணப்படுகிறது. துவாரங்கள் உள்ளது இதன் சிறப்பு. மற்றொரு பானை ஓட்டில், மீன் உருவம் பொறித்துள்ளது.

முதுமக்கள் தாழிகளின் மேற்கு பகுதியில் வட்டவடிவமான அலங்காரங்கள் மூன்று மற்றும் நான்கு அடுக்கில் பொறிக்கப்பட்டுள்ளது.

தாழியின் விளிம்பு பகுதியில் கயிறு போன்ற அலங்கார குறியீடுகள் காணப்படுகின்றன. இவை மண்பாண்டங்கள் சுடுவதற்கு முன் வரையப்பட்டவை என தெரிகிறது.

விரிவான தொல்லியியல் ஆய்வு மேற்கொண்டால், பண்டைய தமிழர்களின் சிறப்புகளையும், வாழ்வியல் முறை, நாகரீகத்தையும் பண்பாட்டு அடையாளங்களையும் வெளிக்கொணர முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## நிற்க அதற்குத்தக...

**நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்**

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்தபோது.

ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.

இ) நகரப் பேருந்து நிலையத்தில் வழிகேட்ட பெரியவருக்கு வழிகாட்டிய போது.

ஈ) பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது முதியவரின் பழுதாகி நின்ற இருசக்கர வாகனத்தைச் செய்த போது.

**நிறைவுரை :**

வித்யானந்தன் எழுதிய இந்நூல் பல கலைச் சொற்களையும் விளக்குகின்றது.

※※⁂⁂⁂※※


www.nammakalvi.com



*வாழ்வியல்*

இயல் மூன்று

# திருக்குறள்



திருவள்ளுவர்

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.

பிற அறநூல்களைப் போல் அல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

## பொறையுடைமை

**குறள் 1** : **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**விளக்கம்** : தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

அகழ்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்

பொறுத்தல் - தொழிற்பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**பொறுத்தல் – பொறு + த் + த் + அல்**

| | | |
|---|---|---|
| **பொறு** | – | பகுதி |
| **த்** | – | சந்தி |
| **த்** | – | சாரியை |
| **அல்** | – | தொழிற்பெயர் விகுதி |

**அகழ்வார் – அகழ் + வ் + ஆர்,**

| | | |
|---|---|---|
| **அகழ்** | – | பகுதி |
| **வ்** | – | எதிர்கால இடைநிலை |
| **ஆர்** | – | பலர்பால் வினைமுற்று விகுதி |

இக்குறளில் **உவமையணி** பயின்றுவந்துள்ளது.

**குறள் 2** : **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று**

**விளக்கம்** : பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாமை சிறப்புக்குரியது.

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

**திறம் - திறன்** - மகரத்திற்கு னகரம் போலி, **அறம் - அறன்** - மகரத்திற்கு னகரம் போலி,

**செய்யாமை** - எதிர்மறைத் தொழிற்பெயர்

**தம்பிறர்** - (தமக்குப் பிறர்) கு – நான்காம் வேற்றுமைத் தொகை

**நோ - நொ** - முதனிலை திரிந்த தொழிற்பெயர் நொ - ஓரெழுத்து ஒருமொழி நாற்பத்திரண்டனுள் ஒன்று

**குறள் 3** : **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்.** பக்கம்: 88

**விளக்கம்** : செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

**வென்றுவிடல்** - 'அல்' ஈற்று வியங்கோள் வினைமுற்றுவிகுதி

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**விடல் - விடு + அல்**

**விடு** - பகுதி,

**அல்** - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று விகுதி

## தீவினை அச்சம்

**குறள் 4** : **தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.**

**விளக்கம்** : தீச்செயலை எவர் செய்தாரோ அவருக்கே அது துன்பத்தைச் செய்யும். தொட்டால் மட்டுமே சுட்டெரிக்கும் தீயைக் காட்டிலும் நினைத்த அளவிலே சுட்டெரிக்கும் ஆற்றல் உள்ளது தீச்செயல். அதற்காக அஞ்ச வேண்டும்.

**பொருள் அறிதல் :**

| | | |
|---|---|---|
| தீயவை | - | தீமையான செயல் |
| பயத்தலால் | - | தருவதால் |
| தீயினும் | - | நெருப்பை விட |

**குறள் 5** : **மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.**

**விளக்கம்** : மறந்தும் கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது. நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

**சூழற்க** - வியங்கோள் வினைமுற்று,

**சூழ்ந்தவன்** - வினையாலணையும் பெயர்

**கேடு - கெடு** > கேடு முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :**

**சூழற்க** - **சூழல் (ற்) + க**

**சூழல்** - பகுதி ல் > ற் ஆனது விகாரம்

**க** - வியங்கோள் வினைமுற்று

## வேள்வி

**குறள் 6** : **செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாந் தலை.**

**விளக்கம்** : செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச்செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

**அணியிலக்கணம் :**

குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**அணிப்பொருத்தம் :**

இக்குறட்பாவில் ‘செல்வம்’ என்னும் சொல் பலமுறை வந்து ‘கேள்வி’ என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

**குறள் 7** : **எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

**விளக்கம்** : எவ்வளவு சிறிதானாலும் நல்வற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

**குறள் 8** : **நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயினர் ஆதல் அரிது.**

**விளக்கம்** : சான்றோரின் நுட்பமான அறிவுரைகளைக் கேளாதவர்கள் பணிவுடையவராக இருக்க மாட்டார்கள். அத்தகையவரிடமிருந்து பணிவான சொற்களை எதிர்பார்க்க முடியாது

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

**கேள்வியர்** - வினையாலணையும் பெயர்

**வாயினர்** - வினையாலணையும் பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**நுணங்கிய = நுணுங்கு + இ(ன்) + ய் + அ**

**நுணங்கு** – பகுதி,
**இ(ன்)** – இறந்தகால இடைநிலை
னகரம் புணர்ந்து கெட்டது விகாரம்
**ய்** – உடன்படு மெய் சந்தி
**அ** – பெயரெச்ச விகுதி

**வணங்கிய = வணங்கு + இ(ன்) + ய் + அ**

**வணங்கு** – பகுதி,
**இ(ன்)** – இறந்தகால இடைநிலை
னகரம் புணர்ந்து கெட்டது விகாரம்
**ய்** – உடன்படு மெய் சந்தி
**அ** – பெயரெச்ச விகுதி

www.nammakalvi.com



**குறள் 9** : **செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

**விளக்கம்** : கேள்விச் சுவையை உணராமல் நாவின் சுவையை மட்டும் உணர்பவர் இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன!

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

அவியினும் வாழினும் – எண்ணும்மை

## தெரிந்து தெளிதல்

**குறள் 10** : **குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

**விளக்கம்** : ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து அறிந்து அவற்றுள், எது மிகுதியாகக் காணப்படுகிறதோ அதைக் கொண்டு அவர் இத்தகையவர் என்று முடிவு செய்தல் வேண்டும்.

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**அணியிலக்கணம் :** குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் 'நாடி' என்னும் சொல் பலமுறை வந்து 'ஆராய்ந்து' என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

**குறள் 11** : **பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

**விளக்கம்** : ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவர் செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.

**அணி** : ஏகதேச உருவக அணி

**குறள் 12** : **தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்.**

**விளக்கம்** : ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும் அவ்வாறு தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பத்தைத் தரும்.

## ஒற்றாடல்

(அரசன் ஒற்றர்களை நிர்விகித்தல்)

**குறள் 13** : **ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல்.**

www.nammakalvi.com



**விளக்கம்** : ஒற்றன் ஒருவன் மறைந்திருந்து கேட்டுத் தெரிந்ததையும் மற்றோர் ஒற்றனை அனுப்பி அறிந்து வரச் செய்து, அவற்றை ஒப்பு நோக்கிய பின்பே, மன்னன் அவனை உண்மையென நம்ப வேண்டும்

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

## வினைத்தூய்மை

**குறள் 14** : **ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்.**

**விளக்கம்** : மேலும் மேலும் மேம்பாடு அடைய விரும்புகிறவர்கள், தம் புகழ் கெடுவதற்குரிய செயல்களைச் செய்யக் கூடாது.

**குறள் 15** : **ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**

**விளக்கம்** : பெற்றெடுத்த தாயே பசியால் துன்பம் உறுவதைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், அறிவுடைய சான்றோர் பழிக்கும் இழிசெயல்களைச் செய்யக் கூடாது

**இலக்கணக் குறிப்பு அறிதல் :**

**ஈன்றாள்** - வினையாலணையும் பெயர்
**சான்றோன்** - வினையாலணையும் பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :**

**செய்யற்க** - செய் + அல் + க
**செய்** - பகுதி
**அல்** - ல் - ற் ஆனது விகாரம்
**க** - வியங்கோள் வினைமுற்று விகுதி

**குறள் 16** : **சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்**
**கலத்துநீர் பெய்திரீஇ யற்று.**

**விளக்கம்** : தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரேற்றி வைப்பதைப் போன்றது. (சலம் - வஞ்சனை).

**அணி** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **உவமையணி** ஆகும்.

**அணியிலக்கணம் :** ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்குமாயின் அஃது உவமையணி ஆகும்

**உவமை** : பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ

**உவமேயம்** : சலத்தால் பொருள் செய்தே மார்த்தல்

**உவம உருபு** : அற்று

**அணிவிளக்கம் :** வஞ்சகமான வழிகளில் பொருள் சேர்த்து அப்பொருளைப் பாதுகாப்பது உலராத பச்சை மண்பானையில் நீர் நிறைத்துப் பாதுகாக்க முயல்வதைப் போன்றது ஆகும்

www.nammakalvi.com



## பழைமை

**குறள் 17** : **விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்**
**கேளாது நட்டார் செயின்.**

**விளக்கம்** : நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர், விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர். (நட்டார் - நண்பர்கள்)

**அணியிலக்கணம் :** குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

| இலக்கணக் குறிப்பு அறிதல் : | | | பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் : | | |
|---|---|---|---|---|---|
| **விழைதகையான்** | – | வினையாலணையும் பெயர் | **கேளாது** | – | கேள் + ஆ + த் + உ |
| **கெழுதகையான்** | – | வினையாலணையும் பெயர் | **கேள்** | – | பகுதி |
| | | | **ஆ** | – | எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது விகாரம் |
| | | | **த்** | – | இறந்தகால இடைநிலை |
| | | | **உ** | – | வினையெச்ச விகுதி |

## தீ நட்பு

**குறள் 18** : **கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.**

**விளக்கம்** : செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் இருப்பவர்களுடைய நட்பானது கனவில் கூட துன்பத்தினைத் தருவதாகும்.

**அணியிலக்கணம் :** குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :**

**பட்டார்** - **படு (பட்டு) + ஆர்**
படு - பகுதி,
படு - பட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது
ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

## பேதைமை

(பேதைமையின் தொழில் யாவை?)

**குறள் 19** : **நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.**

**விளக்கம்** : நாணவேண்டுவனவற்றிற்கு நாணம்கொள்ளாமையும், நாடவேண்டுவனவற்றை நாடாமையும் யாவரிடத்தும் அன்பில்லாமையும் விரும்ப வேண்டுவனவற்றை விரும்பாமையும் பேதையின் தொழில்களாகும்.(பேதைமை - அறிவிலிகளின் அறியாமைக் குணம்)

**அணியிலக்கணம் :** குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :**

**நாணாமை - நாண் + ஆ + மை**
நாண் - பகுதி,
ஆ - எதிர்மறை இடைநிலை,
மை - பண்புப் பெயர் விகுதி

**நாடாமை - நாடு + ஆ + மை**
நாண் - பகுதி,
ஆ - எதிர்மறை இடைநிலை,
மை - பண்புப் பெயர் விகுதி

**பேணாமை - பேண் + ஆ + மை**
பேண் - பகுதி, ஆ - எதிர்மறை இடைநிலை, மை - பண்புப் பெயர் விகுதி.

**குறள் 20 :** **ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.**

**விளக்கம் :** படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவர்க்குக் கூறியும் தான் அதன்படி செயல்படாத பேதையைப் போல பேதை யாருமில்லை.

**இலக்கணக் குறிப்பு அறிதல்:**

**தானடங்காப் பேதை** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**பேதையார்** - வினையாலணையும் பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம் அறிதல்:**

**உணர்ந்தும் உணர் + த்(ந்) + த் + ஓம்**
**உணர்** – பகுதி,
**த்(ந்)** – சந்தி 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**ஓம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

**உரைத்தும் உரை + த் + த் + உம்**
**உரை** – பகுதி,
**த்** – சந்தி
**த்** – இறந்தகால இடைநிலை
**உம்** – தெரிநிலை வினையெச்ச விகுதி

## கற்பவை கற்றபின்

பக்கம்: 91

**1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

www.nammakalvi.com



ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

**விடை: இ)**

**2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**பாடல்**

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் - மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

(1893ல் பாரதியாரின் பதினோராவது வயதில் எட்டையபுரம் மன்னர் சமஸ்தானப் புலவர்கள் அவையில், அவரது கவித்திறனைப் புகழ்ந்து '**பாரதி**' என்ற பட்டத்தைச் சூட்டினார்.)

**குறள்**

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

**விடை: ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.**

**குறளுக்குப் பொருள்:**

நமக்கு நல்ல வசதியும் வாய்ப்பும் இருக்கிறது என்றெண்ணி "இவர்க்கு இத்தீங்கை செய்தால் எவர் நம்மை என்ன செய்ய முடியும்?" என்ற இறுமாப்புக் கொண்டு தீங்கிழைத்தவர்களையும் பொறுமைப் பண்பால் வெற்றி காண வேண்டும். (பொறையுடைமை : 8வது குறள்)

**3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | அ) | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| 2. | தத்தம் கருமமே கட்டளைக்கல் | ஆ) | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| 3. | அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | இ) | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல |

**விடை: 1 - இ, 2 - அ, 3 - ஆ**

**4. தீரா இடும்பை தருவது எது?**

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

**விடை: அ) ஆராயாமை, ஐயப்படுதல்**

**குறள்: தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.**

www.nammakalvi.com



**5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.**

அ) நுணங்கிய கேள்வியர் - நுட்பமான கேள்வியறிவு உடையவர்.
முகிலன் நுட்பமான கேள்வியறிவு உடையவனாக இருந்தான். அதனால் பெரியோரிடத்துப் பணிவான சொற்களில் பேசுகிறான்.

ஆ) பேணாமை - பாதுகாக்காமை.
அப்பாவின் நூலைப் பாதுகாக்காமையால் இனியன் பழைய பேப்பர் வியாபாரியிடம் போட்டுவிட்டான்.

இ) செவிச் செல்வம் - கேட்பதால் பெறும் அறிவு.
அறிஞர்களின் அறிவுரைகளைக் கேட்பதால் பெறும் அறிவு தக்க சமயத்தில் பேச்சுப் போட்டியில் பேசுவதற்கு பயன்பட்டது.

ஈ) அறனல்ல செய்யாமை - அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்.
மலரவன் இளமையிலிருந்தே அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருந்ததனால் தான், அமைதிக்கான விருது கிடைத்தது.

## குறுவினா

பக்கம்: 92

**1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?**

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்பவரிடத்தும் பொறுமை காக்க வேண்டும்.

**2. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும் - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

தான் இன்பம் அடையவேண்டுமென எண்ணி இன்னொருவருக்குச் செய்யும் தீய செயல்களே பின்னர் அந்த இன்பத்தை நீக்கும். தீச்செயலை எவர் செய்தாரோ அவருக்கே துன்பத்தைத் தரும். தீ தொட்டால் தான் சுடும். தீயசெயல்கள் நினைத்த அளவிலே சுட்டெரிக்கும் ஆற்றல் உள்ளன. அதனால் தான் '**தீயினும் அஞ்சப்படும்**' என்றார்.

**3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல் - இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

ஒற்றன் ஒருவன் மறைந்திருந்து கேட்டுத் தெரிந்த செய்தியை மற்றோர் ஒற்றனை அனுப்பி அறிந்து வரச் செய்ய வேண்டும் நம்ப வேண்டும் மன்னன், அவற்றை ஒப்புநோக்கிய பின்பே, அதனை உண்மையென நம்பவேண்டும். .

**4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

சொல் ஒன்று, செயல் வேறு என ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் நடந்து கொள்பவரின் நட்பு கனவிலும் துன்பம் தருவதாகும்.

**கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான். "எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

www.nammakalvi.com



பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான். உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான். நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான். இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.
2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
   அறனல்ல செய்யாமை நன்று.
3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
   பேதையின் பேதையார் இல்.

**கதைக்குப் பொருத்தமான குறள்**

**3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.**

**விளக்கம்:**

கற்க வேண்டிய அறநூல்களைக் கற்றறிந்தும் அதன் உண்மைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியும் வாழ்கின்ற ஒருவன், தான் கற்றறிந்த ஒழுக்க நெறியில் வாழத் தவறினால் அவனைப் போன்ற அறிவிலிகள் உலகில் இல்லை.

எனவே **"சொல்வதைப் போல செய்ய வேண்டும் செய்வதையே சொல்ல வேண்டும்"**.

**திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சி செய்திகள்**

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
திருக்குறள் **அகரத்தில் தொடங்கி னகரத்தில்** முடிகிறது.
திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் - **அனிச்சம், குவளை**
திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - **நெருஞ்சிப்பழம்**
திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - **குன்றிமணி**
திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - **குறிப்பறிதல்**
திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - **பனை, மூங்கில்**
திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - **தஞ்சை ஞானப்பிரகாசர்**
திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - **மணக்குடவர்**
திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - **ஜி.யு.போப்**
திருக்குறளில் **கோடி என்ற சொல் ஏழு இடங்களில்** இடம்பெற்றுள்ளது.
**ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில்** எடுத்தாளப்பட்டுள்ளது.
திருக்குறள் இதுவரை **நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில்** வெளிவந்துள்ளது.

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகழாய்வு | - | Excavation | கல்வெட்டியல் | - | Epigraphy |
| நடுகல் | - | Hero Stone | பண்பாட்டுக் குறியீடு | - | Cultural Symbol |
| புடைப்புச் சிற்பம் | - | Embossed sculpture | பொறிப்பு | - | Inscription |

※※⁂⁂⁂※※